O.S.No.28/2018

Name:- Narayanasamy (Pw1)

Date: - 18.02.2019

1,2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி...

பிராது, நிரூபண வாக்குமூலங்கள் , அனைத்தும் என்னால் வழக்கறிஞருக்கு தகவல் சொல்லப்பட்டு, சரிபார்க்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்துள்ளேன். பிராதில் சொல்லப்பட்டுள்ள புல எண்களில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும், என் தாய், தந்தையரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் என் தாயாரின் இறந்த தேதி மற்றும் இறப்புசான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயாருடைய இறந்த தேதி மற்றும் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் இல்லை என்றால் சரிதான். என் தந்தை 1998ம் ஆண்டு இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக என் தாயார் இறந்து விட்டார். அதனால் என் தாய், தந்தை வாங்கிய சொத்துக்கள், அவர்கள் இறந்த பின்பு அவருடைய பிள்ளைகள் அனைவருக்கும் சமஉரிமை பாகம் உண்டு என்றால் சரிதான். இவ்வழக்கில் என் அண்ணன் பெருமாள்ராஜ், சீனியம்மாள், சரஸ்வதி ஆகியோர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லைஎ ன்றால் அவசியம் இல்லாததால் சேர்க்கவில்லை. பாண்டியன் என்ற பழனிச்சாமியின் வாரிசுகளான பெருமாளம்மாள், ஜெயலட்சுமி, மல்லிகா ஆகியோர்களையும், லட்சுமணனின் வாரிசுகளான இராஜம்மாள், ஜெயலட்சுமி, ஆகியோர்களையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் அவசியம் இல்லாததால் சேர்க்கவில்லை. மேற்படி நபர்கள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றும், அவசியமான தரப்பினர்களை கட்சி சேர்க்காததால், என் வழக்கு பாதிப்படைந்துள்ளதென்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 பாகபிரிவினை ஆவணமானது சிவகிரியில் உள்ள மரியதாஸ் என்பவரிடம் வாங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளதென்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் என் தாயார் உயிரோடுதான் இருந்தார்என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தினை என் தாயார் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் அம்மாவின் ஒரு சொத்தும் வா.சா.ஆ.6ல் அடங்கியுள்ளதென்றால் சரிதான். வா.சா.ஆ.6 என் தகப்பனார் பெயரில் வாங்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் அடித்தல் திருத்தல் உள்ளதென்றால் சரிதான். வா.சா.ஆ.6 என் கைப்பட எழுதப்பட்டதென்றால் சரிதான். வா.சா.ஆ.6ல் சொக்கலிங்கமும், சவுண்டன் செட்டியாரும் கையெழுத்துசெய்துள்ளார்கள். சொக்கலிங்கம் உயிரோடு

உள்ளார். சவுண்டன் செட்டியார் இறந்து விட்டார். வா.சா.ஆ.6ல் உள்ள பெருமாள்ராஜ், ராமசாமி, பழனிசாமி, சீனிவாசன் ஆகியோர்கள் கையெழுத்து செய்யவில்லை என்றும், அவர்களுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தினை பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணமானது முத்திரைத்தாள்களை வேறு மாவட்டத்தில் கிரையம் பெற்றதால், பதிவு செய்ய முடியவில்லை என்று சொன்னால் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லாததால், பதியவில்லை. என் தந்தை பெருமாள் செட்டியார் கையெழுத்து தான் செய்வார் என்றும், கைரேகை வைக்கமாட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தவறான தகவலைத் தந்து, என் பெயரில் என் பங்காளிகளுக்கு தெரியாமல் பட்டா ஏற்படுத்திக் கொண்டதினை தவறாக பயன்படுத்திக்கொண்டு, அதை நியாயப்படுத்துவதற்காக, வா.சா.ஆ.6 ஆவணம் என்னால் போர்ஜரியாக தயார் செய்யப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. அதனால் தான் நான் மேற்படி வா.சா.ஆ.6 ஐ பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராதில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் நாளது தேதிவரை பிரிவினையின்றி பொதுவாக அனுபவம் செய்து வரப்பட்டு வருகிறதென்று சொன்னால் சரியல்ல. நான் சொத்துக்களை ஒரு போதும் தனியாக அனுபவம் செய்து வந்ததில்லை என்றும், கூட்டுரிமையாளராகத்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 2, 3 பக்கங்களில் என்னுடைய பங்காளிகளின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணமானது செல்லத்தக்கதல்ல என்றும், மேற்படி வா.சா.ஆ.6ன் படி எனக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடியதில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11முதல் வா.சா.ஆ.21 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் கண்டுள்ள சீனிவாசன் என்பவர் கையெழுத்திற்கும், வா.சா.ஆ.6ல் உள்ள சீனிவாசன் என்ற கையெழுத்திற்கும் மாறுபாடு உள்ளதென்றால் இல்லை. வா.சா.ஆ.12, வா.சா.ஆ.6 ஆவணங்கள் கையெழுத்து வித்தியாசம் உள்ளதென்றும், மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால், வழக்கிற்காக நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் கண்டுள்ளபடி பழனிசாமி என்று கையெழுத்து செய்யமாட்டார் என்றும், பாண்டியன் என்றுதான் கையெழுத்து செய்வார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7,8,10 ஆகியவைகள் என்னுடைய பங்காளிகளுக்கு தெரியாமல் என்னால் தகவல் கொடுக்கப்பட்டவை என்றும்,

அதன் பேரில் எனக்கு எந்த உரிமையும் கிடையாதென்றால் சரியல்ல. வா.சா.ஆ.15ஆவணமானது 2016ம் ஆண்டிற்கானதென்றால் சரிதான். மற்ற இரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1994 - 2016வரையுள்ள காலங்களுக்கு என் பெயருக்கு வா.சா.ஆ.15ஐ தவிர, மற்ற இரசீதுகள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் என்னால் உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. ரவிபாண்டியர் என்பவர் மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்து, அம்மனு நிலுவையில் இருந்து வருகிறதென்றால் சரியல்ல. ஒரு சட்டப்பிரச்சனையை தவிர்ப்பதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதில்லை என்றால் சரியல்ல. பிராதில் கண்டுள்ள 1ம் அயிட்ட சொத்து 8ம் பிரதிவாதியால் அனுபவம் செய்யப்பட்டு வருகிறதென்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தினை நான் எக்காலத்திலும் தனியாக அனுபவம் செய்தது கிடையாதென்று சொன்னால் சரியல்ல. சாகுபடி கணக்குகள் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய பங்காளிகளால் கூட்டாக அனுபவம் செய்யப்பட்டு வருகிறதென்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து தனித்து பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கேட்கமுடியாதென்றும், நான் கேட்கும் எந்தப்பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் யாரும் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்பதால், வழக்கிற்கான மூலகாரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியதென்றால் சரியல்ல.